15.03.2016

தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

## தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்துக்கு விருது

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்துக்கு 2016-ஆம் ஆண்டுக்கான ரிகோ சிறப்புக் கல்வி விருது வழங்கப்பட்டுள்ளது.

தகவல் தொழில்நுட்பத்தை சிறப்பாகப் பயன்படுத்தியதற்காக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்துக்கு இந்த விருது வழங்கப்பட்டது. புது தில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக தேர்வாணையக் கட்டுப்பாட்டாளர் கி.இளமுருகு விருதைப் பெற்றுக்கொண்டார்.

மேலும், இப்பல்கலைக்கழகத்தில் விடைத்தாள்கள் அற்ற தேர்வு முறை 2013-ஆம் ஆண்டிலிருந்து பின்பற்றப்பட்டு வருகிறது.

இது, முதன்முதலாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்தான் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த முறையில், திருத்தப்பட்ட விடைத்தாள்களை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்களே சரிபார்க்கலாம். எனவே, இந்தத் தேர்வு முறை மாணவர்களால் பெரிதும் விரும்பப்படுகிறது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் ரிகோ 2016 சிறப்புக் கல்வி விருது (நிறுவனப் பிரிவில்) பெற்றிருப்பது பல்கலைக்கழக வரலாற்றில் ஒரு மைல்கல் என பல்கலைக்கழக தேர்வாணையக் கட்டுப்பாட்டாளர் கி.இளமுருகு தெரிவித்தார்.

## மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 193 கன அடியாக அதிகரிப்பு

மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு நொடிக்கு 193 கன அடியாக அதிகரித்துள்ளது.

கர்நாடக மாநிலத்தில் காவிரியின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மழை

இல்லாத காரணத்தால், மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு கணிசமாக சரிந்தது. இதையடுத்து, கடந்த மூன்று தினங்களாக அணைக்கு வரும் நீரின் அளவு 112 கன அடியாக இருந்தது. திங்கள்கிழமை காலை மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு நொடிக்கு 193 கன அடியாக அதிகரித்துள்ளது.

திங்கள்கிழமை காலை மேட்டூர் அணையின் நீர்மட்டம் 60.15 அடியாக இருந்தது. அணையிலிருந்து குடிநீர்த் தேவைக்காக நொடிக்கு 2,000 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டது. அணையின் நீர் இருப்பு 24.79 டி.எம்.சி.

## 50,000 டன் பருப்பு கொள்முதல் செய்கிறது இந்திய உணவுக் கழகம்

போதுமான கையிருப்பை உறுதி செய்து கொள்ளும் வகையில், விவசாயிகளிடமிருந்து 50,000 டன் பருப்பு கொள்முதல் செய்ய இந்திய உணவுக் கழகம் (எப்சிஐ) திட்டமிட்டுள்ளது. இதற்காக, ரூ.240 கோடி செலவிடப்பட உள்ளதாக மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதுகுறித்து மேலும் கூறப்பட்டதாவது:

உள்நாட்டு சந்தையில் பருப்பு விலை உயர்வைக் கட்டுப்படுத்தும் வகையில் ரபி பருவத்தில் 1 லட்சம் டன் பருப்பை கொள்முதல் செய்ய மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது.

இதில், 50,000 டன் பருப்பு கொள்முதலை இந்திய உணவுக் கழகம் மேற்கொள்ள உள்ளது. எஞ்சியுள்ள 50,000 டன் பருப்பை "நாபெட்' மற்றும் எஸ்எப்ஏசி அமைப்புகள் கொள்முதல் செய்யும்.

இந்திய உணவு கழகத்தின் கொள்முதல் நடவடிக்கை விவசாயிகளிடம் இந்த வாரத்தில் தொடங்க உள்ளது. 40,000 டன் பருப்பு வகைகளையும், 10,000 டன் மைசூர் பருப்பையும் கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

**புகையான் பூச்சித் தாக்குதலைக் கட்டுப்படுத்தும் முறை**



ஆற்காடு: தற்போது நெற்பயிரில் புகையான் பூச்சித் தாக்குல் காரணமாக அதிக அளவில் சேதம் ஏற்படுகிறது.

புகையான் பூச்சித் தாக்குதலைக் கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து ஆற்காடு வேளாண் உதவி இயக்குநர் சு.பேபி பர்வதம் கூறியதாவது:

ஆற்காடு வட்டத்துக்கு உள்பட்ட சக்கரமல்லூர், கிளாம்பாடி, குருமுடிதாங்கல், கரிகந்தாங்கல் உள்ளிட்ட பகுதிகளில் தற்போது பயிரிடப்பட்டுள்ள நெற்பயிரில் புகையான் பூச்சித் தாக்குதல் அதிகமாகக் காணப்படுகிறது.

இந்தத் தாக்குதல் பயிரின் கதிர் பருவம், கதிர் முதிர்ச்சிப் பருவங்களில் அதிகமாகக் காணப்படுகிறது. இதனால், வயலில் ஆங்காங்கே திட்டுத் திட்டாக காய்ந்து தீய்ந்தது போல் காணப்படும்.

புகையான் பூச்சித் தாக்குதல் தீவிரம் அடையும்போது தான், நோய் தாக்கிய நிலைமை வெளிப் பார்வைக்கு தெரியவரும்.

பயிரை விலக்கி அடிப்பகுதியைப் பார்த்தால் கொசு போன்ற சிறிய பூச்சிகள் இளம் பழுப்பு நிறத்தில் ஊர்ந்து செல்வதைக் காண முடியும். இந்நிலையில், விவசாயிகள் நெற்பயிரில் ஆறு அடிக்கு ஒரு அடி வீதம் பயிரை விலக்கி இரண்டு பக்கமும் சாய்த்து இடைவெளி ஏற்படுத்த வேண்டும்.

மேலும், ஒரு ஹெக்டேருக்கு பைப்பரினில் 0.3 சதவீதம் ஜிபி 16 முதல் 25 கிலோ, இமிடாகுளோபிரிட் எஸ்எல் 100 முதல் 125 மி.லி, பைப்பரினில் 5 சதவீதம் எஸ்.சி. 1,000 முதல் 1,500 மி.லி. அல்லது டைகுளோர்வாஸ் 500

மி.லி. ஆகியவற்றில் ஏதாவது ஒரு மருந்தை பயிரின் அடிப்பகுதியில் தெளித்து பூச்சித் தாக்குதலை கட்டுப்படுத்த வேண்டும். மேலும், மருந்து தெளிக்கும்போது வயலில் தண்ணீர் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு, பேபி பர்வதம் கூறினார்.

## குறைந்த நாள்களில் அதிக வருமானம் பெற எள் பயிரிடலாம்



அரக்கோணம்: எண்ணெய் வித்துகளிலேயே மானாவாரி, இறவை இரண்டிலும் 85 நாள்களில் பலனை தரக்கூடிய பயிர் எள் பயிர் ஆகும்.
நிலம் தயாரித்தல்: எள் பயிரிட மணற்பாங்கான வண்டல், செம்மண், கருவண்டல் நிலங்கள் ஏற்றவை. நிலத்தை இரு முறை டிராக்டர் கலப்பையால் (அ) மூன்று முறை இரும்புக் கலப்பையால் (அ) ஐந்து முறை நாட்டுக் கலப்பையால் உழ வேண்டும். சிறு விதைகளும் முளைக்குமாறு மண்ணில் உள்ள கட்டிகளை உடைத்து நுண்மைப்படுத்த வேண்டும்.

மண்ணில் உள்ள கடினமான கட்டிகளை உடைக்க உளிக் கலப்பையைக் கொண்டு 0.5 மீட்டர் ஆழத்தில் இருந்து, செங்குத்தான திசைகளில் உழ வேண்டும். பிறகு, 12.5 டன் தொழு உரம் (அ) மக்கிய தென்னை நார்க்கழிவு இட வேண்டும். இறவை எள் சாகுபடிக்கு, கிடைக்கும் நீர், நிலத்தின் சரிவைப் பொருத்து 10 சதுர மீட்டர் அல்லது 20 சதுர மீட்டர் அளவுக்கு படுக்கை தயாரிக்க வேண்டும். நீர் தேங்குவதைத் தடுக்க சமன்படுத்த வேண்டும். நெல் சாகுபடிக்குப் பிறகு எள் போடும்

நிலமானது சரியான ஈரப்பதத்தில் ஒரு முறை உழுதபின், விதை விதைத்த பிறகு மற்றொரு உழவினால் மூட வேண்டும்.

விதை நேர்த்தி: ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் டிரைகோடெர்மா கொண்டு விதை நேர்த்தி செய்ய வேண்டும். விதைப்புக்கு முன் விதை நேர்த்தி செய்ய வேண்டியது முக்கியம். நேர்த்தி செய்யப்பட்ட விதைகளை பூசணக்கொல்லியுடன் விதை நேர்த்தி செய்வதைத் தவிர்க்கவும் (அல்லது) ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் திரம் (அ) 2 கிராம் கார்பன்டாசிம் கொண்டு விதை நேர்த்தி செய்யவும்.

விதைக்கும் முறை: விதைகளை வரிசையில் விதைக்க வேண்டும். விதையின் அளவில் நான்கு மடங்கு மணலுடன் விதையைக் கலந்து நிலத்தின் மேற்பரப்பில் சீராகத் தூவ வேண்டும். 3 செ.மீ. ஆழத்தில் விதைகளை விதைத்து, மண் கொண்டு மூட வேண்டும். கோடை பாசன நிலையில, வி.ஆர்.ஐ. (எஸ்.வி.) 1 என்னும் ரகத்தை விதைப்பதற்கு பிப்ரவரி 15 முதல் மார்ச் 15 வரை உகந்த காலமாகும்.

இடைவெளி: வரிசைக்கு வரிசை 30 செ.மீ. இடைவெளியும், செடிக்கு செடி 30 செ.மீ. இடைவெளியும் கொடுக்க வேண்டும். நெல் தரிசில், விதைகளை வீசி விதைக்க வேண்டும். பின்னர், ஒரு சதுர மீட்டருக்கு 11 செடிகள் வீதம் பயிர் கலைத்தல் வேண்டும்.

ரசாயன உரம்: மண் பரிசோதனைப் படி உரமிடுதல் சிறந்தது. அவ்வாறு செய்யாவிடில் பொதுவான பரிந்துரையின்படி பின்பற்றவும். மானாவாரி: ஹெக்டேருக்கு 23:13:13 கிலோ தழை, மணி, சாம்பல் சத்து (அ) 17:13:13 கிலோ தழை, மணி, சாம்பல் சத்துடன் 3 பாக்கெட் அசோஸ்பைரில்லம் (600 கிராம்), 3 பாக்கெட் பாஸ்போபேக்டீரியா (600 கிராம்) (அ) 6 பாக்கெட் அசோபாஃப்ஸ (1,200 கிராம்) இட வேண்டும். இறவை: ஹெக்டேருக்கு 35:23:23 கிலோ தழை, மணி, சாம்பல் சத்து (அ) 21:23:23 கிலோ தழை, மணி, சாம்பல் சத்துடன் 3 பாக்கெட் அசோஸ்பைரில்லம் (600 கிராம்) மற்றும் 3 பாக்கெட் பாஸ்போபேக்டீரியா (600 கிராம்) (அ) 6 பாக்கெட் அசோபாஃப்ஸ (1,200 கிராம்) இட வேண்டும். தழை, மணி, சாம்பல் சத்து முழுவதையும் அடியுரமாக இட வேண்டும். ஹெக்டேருக்கு 5 கிலோ மாங்கனீஸ் சல்பேட்டை சேர்த்து கொள்ளவும். நிலக்கடலை பயிரைத் தொடர்ந்து இறவை எள் பயிரிடும் போது, பரிந்துரைக்கப்பட்ட உரங்களில் தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து ஆகியவற்றை இட வேண்டும். 30 செ.மீ. இடைவெளியில் 5 செ.மீ. ஆழத்தில் வாய்க்கால் தோண்டி உரக்கலவையை அதில் இட்டு, 3 செ.மீ. ஆழத்துக்கு மண் கொண்டு மூட வேண்டும். இவ்வாறு வாய்க்காலில் இடவில்லை எனில், உரங்களை சீராக படுக்கையின் மீது தூவ வேண்டும்.

ஹெக்டேருக்கு நுண்ணூட்டக் கலவை 7.5 கிலோவை செறிவூட்டப்பட்ட தொழு உரமாக மானாவாரி எள்ளுக்கும், ஹெக்டேருக்கு நுண்ணூட்டக் கலவை 12.5 கிலோவை செறிவூட்டப்பட்ட தொழு உரமாக இறவை எள்ளுக்கு இட வேண்டும். ஊட்டமேற்றிய தொழு உரம் தயாரிக்க 1:10

என்ற விகிதத்தில் நுண்உரக் கலவை, தொழு உரத்தைச் சேர்த்து தகுந்த ஈரப்பதத்தில் ஒரு மாதம் நிழலில் உலர்த்தவும்.

களைக் கட்டுப்பாடு, பின்செய் நேர்த்தி: விதைத்த 15 நாள்கள் கழித்து முதலாவது களையும், 35 நாள்கள் கழித்து இரண்டாவது களையும் எடுக்க வேண்டும்.

நீர் நிர்வாகம்: மண்ணின் தன்மை, பருவகாலம் ஆகியவற்றைப் பொருத்து சுமார் 5 அல்லது 6 முறை நீர் பாய்ச்ச வேண்டும். முதல் முறை விதை விதைத்தவுடன் 7-ஆவது நாள் உயிர்த் தண்ணீர், 25-ஆவது நாள் பூக்கும் தறுவாயில் 2 முறை, காய் பிடிக்கும் தறுவாயிலும், முதிர்ச்சியடையும்போது 2 முறை என சுமார் 6 முறை நீர் பாய்ச்ச வேண்டும். பூ பூக்கும் பருவம் காய் பிடித்து முற்றும் பருவத்தில் நீர் பாய்ச்சுவதைக் கவனமாகக் கடைபிடிக்க வேண்டும். இறவைப் பயிரில் விதைத்த 65 நாள்களுக்குப் பின் நீர் பாய்ச்சக் கூடாது.

அறுவடைக்கான அறிகுறிகள்: செடியில் கீழிருந்து 25 சதவீத இலைகள் உதிர்ந்துவிடும். காய்களும், தண்டு பாகங்களும் பழுப்பு நிறமாக மாறும். செடியின் அடியிலிருந்து மேலாக உள்ள 10-ஆவது காயில் உள்ள விதைகள் கருப்பாக (முதிர்வு) மாறியிருக்கும். மேற்கண்ட அறிகுறிகள் தென்படும்போது அறுவடை செய்துவிட வேண்டும். தவறினால் காய்கள் வெடித்துச் சிதறி மகசூல் குறையும்.

மேலும் எள் பயிர் வேளாண்மை குறித்த விவரங்கள் தேவைப்படுவோர், அவர்களது வட்டாரத்தில் உள்ள வேளாண்துறை உதவி இயக்குநர், வேளாண் அலுவலர், உதவி வேளாண் அலுவலர் ஆகியோரை அணுகி அரசின் உதவிகளையும் ஆலோசனைகளையும் பெறலாம்.

## "நீரா இறக்க அனுமதித்தால் விவசாயிகளின் வாழ்வாதாரம் உயரும்'

தமிழகத்தில் நீரா இறக்க அனுமதி அளித்தால் விவசாயிகளின் வாழ்வாதாரம் உயரும் என்று தமிழ்நாடு கள் இயக்க ஒருங்கிணைப்பாளர் செ.நல்லசாமி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை:

புளிக்காத கள் என்று அழைக்கப்படுவது நீரா. தென்னை, பனை, ஈச்ச மரங்களின் பாளையிலிருந்து நீரா பெறப்படுகிறது. மண் கலயங்களில் சேகரிக்கும்போது நொதிந்து விடும். தற்போதைய நவீன முறையில் கலயத்துக்குப் பதிலாக காற்றுப்புகாத குளிர்சாதனப் பெட்டிக்குள் சுகாதார முறையில் சேமிக்கலாம்.

நீராவில் நிறமியோ, ரசாயன கலப்போ, ஆல்கஹாலோ கிடையாது. கால்சியம், இரும்பு போன்ற ஊட்டச்சத்துக்களும், லோரிக் அமிலம்

கலப்பதால் அது தாய்ப்பாலுக்கு நிகரானதாகவும் உள்ளது. நீராவுக்கு கல்லீரல் நோய்களைக் குணப்படுத்தும் ஆற்றல் உள்ளது. இதை இந்திய அறிவியல் கழக ஆய்வு உறுதிப்படுத்தியுள்ளது.

காசநோய், ஆஸ்துமா, சிறுநீரகக் கோளாறுகளுக்கும் தீர்வாக நீரா உள்ளது. கிளைசெமிக் இன்டெக்ஸ் அளவு குறைவாக உள்ளதால் சர்க்கரை நோயாளிகளும் இதைப் பருகலாம் என பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

நீராவிலிருந்து தயாரிக்கப்படும் சர்க்கரை உலகத்தரம் கொண்டது என்பதால் அதன் விலை கிலோ ரூ.400க்கு விற்கிறது. ஏற்கெனவே கள் இறக்குவதற்கு தமிழகத்தில் 29 ஆண்டுகளாகத் தடை உள்ள நிலையில் அரசின் தவறான மதுக்கொள்கையால் தமிழகத்தில் குடிநோயாளிகளின் எண்ணிக்கையும் வெகுவாக அதிகரித்துவிட்டது.

மக்களின் உடல் நலன் மற்றும் பொருளாதார முன்னேற்றம் போன்றவற்றை கணக்கிட்டு புளிக்காத கள்ளான நீராவை இறக்கவும், ஏற்றுமதி செய்யவும் விதித்திருக்கும் தடையை நீக்க வேண்டும். இதன் மூலம் விவசாயிகளின் வாழ்வாதாரம் உயரும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**பர்கூர் மலையில் பலா சீசன்: வனத்துறையினர் எச்சரிக்கை**

அந்தியூர்: அந்தியூரை அடுத்த பர்கூர் மலையில் பலாப்பழம் சீசன் துவங்கி உள்ளதால், யானை நடமாட்டம் குறித்து எச்சரிக்கையாக இருக்க, வனத்துறையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இதுகுறித்து, அவர்கள் கூறியதாவது: யானைக்கு பலாப்பழம் மிகவும் பிடித்தமான உணவாகும். எனவே வனப்பகுதி மக்கள், எக்காரணம் கொண்டும், இரவு நேரங்களில் வீட்டுக்குள் வைக்கக் கூடாது. பலா வாசனையில், வீட்டில் புகுந்து தாக்கக்கூடும். இதுபோன்ற சம்பவங்கள் கடந்த ஆண்டுகளில் நடந்துள்ளன. குறிப்பாக தாமரைக்கரை பகுதிவாசிகள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

## மரத்தின் அடிப்பகுதியில் குலைதள்ளிய வாழை

வடமதுரை:வடமதுரை அருகே வாழை மரம் ஒன்று தண்டின் கீழ் பகுதியிலேயே குலை தள்ளியுள்ளது.
வடமதுரை தென்னம்பட்டியை சேர்ந்த தம்பதி முனியாண்டி, ராஜம்மாள். இவர்கள் வீட்டின் முன்பகுதியில் காலியாக இருந்த இடத்தில் 4 ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு ரஸ்தாளி வாழை மரக்கன்றை நட்டனர். வீட்டு உபயோக நீரினால் வளர்ந்த வாழை மரம் தற்போது பல்கி பெருகி ஏராளமான மரங்களாக மாறியுள்ளன. வழக்கமாக வாழை மரம் உயரமாக வளர்ந்த பின்னர் மேல்பகுதியில் குலை தள்ளும். ஆனால் இங்குள்ள ஒரு மரம் அடிப்பகுதியில் குலை தள்ளியுள்ளது. அக்கம் பக்கத்தார் அதனை வியப்புடன் பார்த்து செல்கின்றனர்.

## செவ்வந்தி பூ சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம்

செந்துறை:செந்துறை பகுதியை சேர்ந்த விவசாயிகள் செவ்வந்தி பூ சாகுபடி செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.
மணக்காட்டூர், குடகிப்பட்டி, பிள்ளØயார்நத்தம், கோட்டைப்பட்டி, மேற்கிப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் செவ்வந்தி பூ அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது. முதிர்ந்த செடிகளின் வேர்களை சிறு துண்டுகளாக வெட்டி நடவு செய்ய வேண்டும். நடவு செய்ததில் இருந்து நான்கு மாதங்களில் பலன் கொடுக்க துவங்கிவிடும். 70 நாட்களுக்கு பலன் கிடைக்கும். இப்பகுதியில் போதிய மழை இல்லாததால் பாசனத்திற்கு தண்ணீர் பற்றாக்குறை நிலவுகிறது. செவ்வந்தி செடிக்கு சீரான தண்ணீர் பாய்ச்சினாலே போதுமானது. வறட்சியான சூழலுக்கு ஏற்ற பயிராக செச்வவந்தி விளங்குவதால் அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது. மணக்காட்டூர் பிள்ளையார்நத்தம் பகுதிகளில் விளையும் பூக்களை மதுரை மார்க்கெட்டிலும் மேற்கிபட்டி, குடகிப்பட்டி பகுதிகளில் விளையும் பூக்களை திண்டுக்கல் மார்க்கெட்டிலும் விற்பனை செய்கின்றனர்.

## கோமாரி நோய் தடுப்பு முகாம்

மல்லசமுத்திரம்: மல்லசமுத்திரம் அருகே, கால்நடைகளுக்கான சிறப்பு கோமாரிநோய் தடுப்பு முகாம் நடந்தது. கடந்த, 1ம் தேதி முதல், வரும், 21ம் தேதி வரை மல்லசமுத்திரம் யூனியனில், அந்தந்த பகுதிகளில் உள்ள கால்நடைகளுக்கு கோமாரி தடுப்பூசி போடப்பட்டு வருகிறது. கால்நடை மருத்துவர்கள் ஸ்ரீதரன், சண்முகம் ஆகியோர் கொண்ட குழுவினர்

நேற்று, பாலமேட்டில் நடந்த மருத்துவ முகாமில், 810 பசுக்களுக்கும், 112 எருமைகளுக்கும் தடுப்பூசி போடப்பட்டது.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

## தர்மபுரி வாரச்சந்தையில் பனைவெல்லம் விற்பனை ஜோர் 1 கிலோ ரூ.140

தர்மபுரி : தர்மபுரி ஞாயிறு வாரச்சந்தையில் கிராமத்தில் இருந்து கொண்டு வந்த பனைவெல்லத்தை (கருப்பட்டி), ஒரு கிலோ ரூ.140க்கு விவசாயிகள் விற்பனை செய்தனர். தர்மபுரியில் நேற்று வாரச்சந்தை நடந்தது. கந்தசாமி வாத்தியார் தெரு, கடை வீதி, திருப்பத்தூர் சாலை, சந்தைபேட்டை ஆகிய இடங்களில் நூற்றுக்கணக்கான சிறுவியாபாரிகள் கடைகள் அமைத்து வியாபாரம் செய்தனர். பனைவெல்லம், காய்கறி, பழ வகைகள், மளிகைச்சாமான்கள், காய்கறிகள் விற்பனை ஜோராக நடந்தது. இதில் மத்தூர், மேட்டூர் சுற்றுவட்டார பகுதிகளிலிருந்து பனைவெல்லத்தை கொண்டு வந்து குவித்திருந்தனர். வாகனங்களில் வைத்தும் பனைவெல்லம் விற்பனை செய்தனர். இதை மக்கள் ஆர்வத்துடன் வாங்கி சென்றனர். வாரச்சந்தையில் ஒரு கிலோ ரூ.140க்கு விற்பனை செய்யப்பட்டது.

## 50 ஆயிரம் டன் சின்னவெங்காயம் சேமிப்பு

பெரம்பலூர்,: இறக்குமதியாலும், அதிகவிளைச்சலாலும் 3மடங்கு விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. நல்லவிலைக்காக 50ஆயிரம்டன் சின்னவெங்காயத்தை பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் பட்டறைகளில் சேமித்து வைத்துள்ளனர்.

தமிழகத்திலேயே அதிகப்படியான சின்னவெங்காயம் பெரம்பலூர் மாவட்டத்தில் சாகுபடி செய்யப்படுவதால் கடந்த 10 ஆண்டுகளாக பெரம்பலூர் மாவட்டம் சின்ன வெங்காய சாகுபடியில் முதலிடம் வகித்துவருகிறது. இங்கு கடந்தாண்டு 6,432ஹெக்டேரில் அதாவது 15,887 ஏக்கரிலும், நடப்பாண்டு 8,868 ஹெக்டேரில் அதாவது 21,903ஏக்கரில் சின்னவெங்காயம் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இப்பகுதியில் அறுவடை செய்த வெங்காயத்தை விவசாயிகள்

வயல்களிலேயே பட்டறை அமைத்துப் பாதுகாத்துவரும் வழக்கம் தொன்றுதொட்டு காணப்படுகிறது.

சுற்றுவட்டார வியாபாரிகளை வயல்களுக்கே அழைத்துவந்து பேரம்பேசி விற்பனை செய்வதற்கு மாற்றாக மாவட்ட நிர்வாகம் செட்டிக்குளத்தில் வெங்காயத்தை ஏலத்தின் மூலம் விற்பனை செய்ய ஏற்பாடு செய்தது. பின்னர் வாராவாரம் சின்னவெங்காய ஏலம் தொடர்ந்து நடந்து வருவதால், வெளிமாவட்ட வியாபாரிகளும் பெரம்பலூர் மாவட்டத்திற்கு நேரில் வந்து சின்னவெங்காயத்தின் தரமறிந்து அதற்கேற்ப விலைபேசி வாங்கிச்சென்றனர்.

இருந்தபோதும் வெங்காயத்தைப் பாதுகாக்கிற பட்டறை அமைக்கும் முறைமட்டும் மறைந்து விடாமல் இருந்து வருகிறது.இந்நிலையில் கடந்த ஆண்டைக் காட்டிலும் நடப்பாண்டு 6016 ஏக்கரில் சாகுபடிப் பரப்பு அதிகரித்து உற்பத்தியும் கூடியுள்ளது. அதேநேரம் கர்நாடகா மாநிலம் மைசூரிலிருந்தும், தமிழகத்தில் விளாத்திக்குளம், கோவை, பல்லடம், பொள்ளாச்சி, மதுரை, நெல்லை, காரமடை உள்ளிட்டப் பகுதிகளில் இருந்து சின்னவெங்காயம் இறக்குமதி செய்யப்பட்டு வருவது விவசாயிகளுக்குப் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதனை தங்களுக்கு சாதகமாக்கிக் கொள்ளும் வியாபாரிகள் விவசாயிகளின் வயல்களுக்கு சென்று மிகக்குறைந்த விலைக்கு வெங்காயத்தை விலைபேசி வருகின்றனர்.

அதாவது, கிலோ ரூ.8க்கும், ரூ.10க்கும் பேரம் பேசுகின்றனர். மிகநல்ல வெங்காயமே உழவர்சந்தையில் ரூ.12க்குக் கிடைக்கும்போது, விவசாயிகள் வேறெதுவும் பேச வழியின்றி விழிபிதுங்கித் தவிக்கின்றனர். பொங்கல் சமயத்தில் புதுவெங்காயம் ரூ.35 முதல் ரூ.45வரை விற்கப்பட்டது. விதைவெங்காயம் ரூ.50முதல் ரூ.60வரை விற்கப்பட்டது. ஆனால் தற்போது குறைந்தபட்சம் ரூ.8க்கும் அதிகப்பட்சமாக ரூ.15க்கு மேல் சின்னவெங்காயத்தை விற்கவே முடியாமல் விவசாயிகள் தவிக்கின்றனர்.

இதனால் தங்கள் சின்னவெங்காயத்திற்கு உரிய விலைகிடைக்கும் வரை யாருக்கும்விற்காமல், ஏலத்திற்கும் கொண்டு செல்லாமல், மீண்டும் வயல்களில் பட்டறை அமைத்து பதுக்கிவைத்து இறக்குமதி சீசன்முடிவதற்காக காத்திருக்கத் தொடங்கியுள்ளனர். இதன்படி பெரம்பலூர் மாவட்டத்தில் சுமார் 50ஆயிரம்டன் சின்னவெங்காயம் பட்டறைகளில் சேமித்து வைக்கப்பட்டுள்ளது. இன்னும் 1மாதம்கழித்து

விலையேறினால் அவை விற்பனைக்காக வெளியே வருமென எதிர்பார்க்கப்படுகிறது.

## 1,226 டன் யூரியா தஞ்சை வந்தது

தஞ்சை, : சென்னையில் இருந்து 1,226 டன் யூரியா உரம் தனியார் உரக்கடைகளுக்கு விநியோகம் செய்ய நேற்று தஞ்சைக்கு வந்தது. சென்னையில் இருந்து 22 வேகன்களில் 1,226 டன் யூரியா உரம் நேற்று தஞ்சை ரயில் நிலையம் வந்தது. இந்த உரங்கள் அனைத்தும் ரயில் வேகன்களில் இருந்து இறக்கப்பட்டு லாரிகளில் ஏற்றப்பட்டது. பின்னர் உர மூட்டைகள் அனைத்தும் தஞ்சையில் உள்ள தனியார் உரக் கடைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

## கொளுத்துகிறது கோடை வெயில் தர்பூசணி விற்பனை அமோகம்

கம்பம், : கொளுத்தும் கோடைவெயில் காரணமாக கம்பம் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் தர்ப்பூசணி விற்பனை அமோகமாக நடைபெற்று வருகிறது. கோடை காலமான மார்ச், ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் அதிகமாக விற்பனைக்கு வரும் தர்ப்பூசணி, 'கோடைக்கனி' என்றும் அழைக்கப்படுகிறது. உடலில் உள்ள உஷ்ணத்தை போக்கி, நீர்சத்தை அதிகரிக்கும் பழங்களில் தர்ப்பூசணி முதலிடத்தை வகிக்கிறது. தாகத்தையும், நாவறட்சியையும் தவிற்கும் தன்மை கொண்ட தர்ப்பூசணிப்பழம் நீர்ச்சத்து மிகுந்தது. இதில் 90 சதவீதம் நீர்ச்சத்தும், 3.37 சதவீதம் நார்ச்சத்தும் உண்டு.

இதனால் இது மக்கள் அதிகம் விரும்பி உண்ணுகின்றனர். கோடை அறுவடைக்கு ஏற்றவாறு டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில் தர்ப்பூசணி சாகுபடி செய்யப்படுகிறது. நன்கு பராமரிக்கப்பட்ட தர்பூசணி ஒரு ஹெக்டேரில் சுமார் 40 முதல் 60 டன் வரை மகசூல் கிடைக்கிறது. தமிழகத்தில் திண்டிவனம், கடலூர் உட்பட பல இடங்களில் இது பயிரிடப்படுகிறது.

தற்போது கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளதால் திண்டிவனம் பகுதியிலிருந்து நாள்தோறும் லாரிகளில் லோடுலோடாக தர்ப்பூசணி கம்பம் பகுதிக்கு வருகிறது. இதை இங்குள்ள மொத்த வியாபாரிகள் வாங்கி உள்ளூர் வியாபாரிகளுக்கு கிலோ ரூ.10 முதல் ரூ.12 வரையிலும், சில்லரையாக கிலோ ரூ.15 க்கும் விற்பனை செய்கின்றனர்.

இதுகுறித்து மொத்த வியாபாரி ஒருவர் கூறுகையில், ''திண்டிவனத்தில் கிலோ ரூ.7 முதல் ரூ.8 வரையிலும் கொள்முதல் செய்யப்படுகிறது. அங்கிருந்த இங்கு கொண்டுவர லாரி வாடகை, ஏற்றுக்கூலி

இறக்குக்கூலி, உதவியாளர் சம்பளம் என்பதை பார்க்கும்போது வியாபாரிகளுக்கு குறைந்த அளவு லாபமே கிடைக்கிறது. ஆனால் விவசாயிகளுக்கு இம்முறை தர்ப்பூசணி நல்ல லாபத்தை பெற்றுக்கொடுத்துள்ளது'' என்றார்.

## பாவூர்சத்திரம் மார்க்கெட்டில் மாங்காய் விலை குறைந்தது

பாவூர்சத்திரம், : பாவூர்சத்திரம் மார்க்கெட்டில் மாங்காய் வரத்து அதிகரிப்பால் விலை குறைந்துள்ளது.பாவூர்சத்திரம் காமராஜர் தினசரி மார்க்கெட்டிற்கு செங்கோட்டை, இலஞ்சி, வல்லம், பண்பொழி, காசிமேஜர்புரம், திருமலைக்கோயில், குண்டாறு, மேக்கரை, வடகரை, இலத்தூர் போன்ற பகுதிகளில் இருந்து மாங்காய்கள் விற்பனைக்கு வருகின்றன. இதனை கொள்முதல் செய்ய கேரளா மற்றும் மதுரை, திண்டுக்கல் மாவட்டத்தில் இருந்து வியாபாரிகள் வருவர். நாட்டு மாங்காய்கள் மதுரை, திண்டுக்கல் மாவட்டத்திற்கும், ஒட்டு ரகம் மற்றும் நாட்டு மாங்காய்கள் கேரளாவிற்கு அதிகம் விற்பனையாகும்.

கடந்த 10 நாட்களுக்கு முன் சீசன் இல்லாததால் பாவூர்சத்திரம் மார்க்கெட்டிற்கு 10 டன் முதல் 20 டன் வரை தான் மாங்காய்கள் வரத்து இருந்து. இதனால் கிலோ ஒன்றுக்கு 50 முதல் 85 வரை விற்பனையானது. தற்பொழுது கோடை கால விளைச்சலால் மாங்காய் மகசூல் அதிகரித்து மார்க்கெட்டிற்கு 60 டன் முதல் 100 டன் வரை விற்பனைக்கு வந்துள்ளது. இதனால் கடந்த வாரம் ரூ.50 முதல் 85 வரை விற்ற மாங்காய் திடீரென்று விலை சரிந்து கிலோ ஒன்றுக்கு ரூ.15 முதல் 20 வரை விற்பனையானது. வரத்து அதிகரிப்பு விற்பனையில் மந்தம் ஏற்பட்டதால் இந்த விலை சரிவு என்று தெரிகிறது. இதனால் மாங்காய் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

## திருபுவனை பகுதியில் இயற்கை வேளாண் பொருளை சந்தைப்படுத்த வணிக வளாகம்

திருபுவனை, : திருபுவனை பகுதியில் புதுச்சேரி - விழுப்புரம் ெநடுஞ்சாலையை ஒட்டிய பகுதியில் இயற்கை விவசாயம் செய்யும் விவசாயிகள் தாங்கள் பயிரிடும் பயிர்களை நேரடியாக விற்பனை செய்து வருகிறார்கள். இப்பகுதியில் அரசு சார்பில் சிறு கடைகள் கட்டி கொடுத்தால் பயனுள்ளதாக இருக்கும் என்று விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

புதுச்சேரி அடுத்த திருபுவனை பகுதியில் இயற்கை வழியில் செய்யப்படும் விவசாய முறை தற்போது பரவலாக அதிகரித்து வருகிறது. அவ்வகையில் திருபுவனையை சுற்றியுள்ள கிராமங்களில் வெண்டை, கத்தரி, முள்ளங்கி, தக்காளி உள்ளிட்ட காய்கறிகளும், கீரை வகைகள், வாழை உள்ளிட்ட பழ வகைகள் அதிகளவில் பயிரிடப்பட்டு வருகிறது. குறிப்பாக பிளஸ் பாளையம் பகுதியில் பம்பை ஆற்றங்கரை ஓரத்தில், மலைப்பகுதிகளில் பயிரிடப்படும் கேரட், பீன்ஸ், நூக்கல், உள்ளிட்டவை 16 வகையான காய்கறி பயிர்கள் பயிரிடப்படுகிறது.

இந்த உற்பத்தி பொருட்களை புதுச்சேரி - விழுப்புரம் தேசிய நெடுஞ்சாலை ஓரத்தில் மாலை நேரங்களில் கடைகளை அமைத்து விற்பனை செய்து வருகின்றனர். ரசாயன உரங்கள் கலக்காமல் இயற்கை இடுபொருட்களை கொண்டு விளைந்த பொருட்கள் என்பதாலும், அதை விவசாயிகளே நேரடியாக விற்பனை செய்வதாலும் பொதுமக்கள் ஆர்வமுடன் வாங்கி வருகின்றனர்.

புதுச்சேரியில் மதகடிப்பட்டு பகுதியில் மாட்டுசந்தை இயங்கி வரும் பகுதியை ஒட்டிய தெருக்களில் இயற்கையாக பயிரிடப்பட்ட காய்கறிகளை விற்பனை செய்து வருகிறார்கள். இது போன்ற விவசாயிகளுக்கு அரசு மூலம் சிறு சிறு கடைகளை கட்டி கொடுத்து உழவர் சந்தை போல செயல்படுத்தினால் விவசாயிகளுக்கு உபயோகமாக இருக்கும். மேலும் இதன் மூலம் இப்பகுதியில் இயற்கை விவசாயத்தை ஊக்குவித்தது போலவும் இருக்கும் என்கிறார்கள் விவசாயிகள்.

இன்றைய வேளாண் செய்திகள்

## ஆரஞ்சு பழம் வரத்து அதிகரிப்பு கிலோ ரூ.30-க்கு விற்பனை




தர்மபுரிக்கு ஆரஞ்சு பழங்களின் வரத்து அதிகரித்திருப்பதால் கிலோ ரூ.30-க்கு விற்பனை செய்யப்படுகிறது.

ஆரஞ்சு பழங்கள்

தமிழகத்தில் கோடை வெயில் கொளுத்த தொடங்கி உள்ளது. இதன் ஒரு பகுதியாக தர்மபுரி மாவட்டத்தில் கடந்த ஒரு வாரமாக வெயிலின் அளவு படிப்படியாக அதிகரித்து வருகிறது. கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்து இருப்பதால் இளநீர், நுங்கு, தர்பூசணி உள்ளிட்ட குளிர்ச்சி தரும் உணவு பொருட்களின் விற்பனை அதிகரித்து வருகிறது.

இந்த நிலையில் தர்மபுரி மாவட்டத்திற்கு கடந்த சில நாட்களாக ஆரஞ்சு பழ வரத்து வழக்கத்தை விட அதிகரித்து உள்ளது. இதனால் தர்மபுரி

நகரம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் சாலையோரங்களில் ஆங்காங்கே ஆரஞ்சுபழங்கள் குவித்து வைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன.

ரூ.30-க்கு விற்பனை

ஒரு கிலோ ஆரஞ்சுபழம் ரூ.30-க்கு விற்பனை செய்யப்படுகிறது. கோடை வெயிலால் ஏற்படும் உடல் சூட்டை தணிப்பதில் ஆரஞ்சு பழம் முக்கிய பங்கு வகிக்கிறது. இந்த நிலையில் பழத்தின் விலை வழக்கத்தை விட குறைந்திருப்பதால் விற்பனை அதிகரித்து உள்ளது. இதுகுறித்து சாலையோரங்களில் கடை அமைத்து ஆரஞ்சு பழங்கள் விற்கும் வியாபாரிகள் தரப்பில் கூறுகையில், மராட்டிய மாநிலம் நாக்பூரில் இருந்து தர்மபுரிக்கு ஆரஞ்சு பழங்கள் விற்பனைக்கு கொண்டு வரப்படுகின்றன. இந்த சீசனில் உற்பத்தி அதிகரிப்பால் வரத்து அதிகரித்து விலை குறைந்து உள்ளது. இதனால் பொதுமக்களும் ஆரஞ்சு பழங்களை அதிக அளவில் வாங்குகிறார்கள் என்று தெரிவித்தனர்.